Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 28

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

பகுதி 1

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. உழுந்தின் உள்ளீடு பருப்பு என்பது போல கோதுமையின் உள்ளீடு
   (1) முத்து (2) விதை (3) அரிசி (4) சோறு
2. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி அல்லாதது
   (1) தட தட (2) பல பல (3) பட பட (4) குடு குடு
3. பேச்சுறுதி தவறுதல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
   (1) நாக்குத் தப்புதல் (2) நாக்கு வளைத்தல்
   (3) நாவசைத்தல் (4) நாக்கு நீட்டுதல்
4. பேணிக்காத்துத் தருமாறு பொருளை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்
   (1) ஒப்பரவு (2) ஒத்திகை (3) ஓலக்கம் (4) ஓம்படை
5. நெடுங்காலம் வாழ்பவன்
   (1) சிரஞ்சீவி (2) தீர்க்கதரிசி (3) நைட்டிகள் (4) விகடகவி

பகுதி 2

பின்வரும் வினாக்களுக் சுருக்கமாக விடை எழுதுக

1) “இந்தக்கம்பியூட்டர் அப்படித்தான். அட்சஇருதயக் கலையில் கைதேர்ந்ததாக இருந்தது.”
   i. அட்சஇருதயக்கலை என்றால் என்ன?
   ii. அட்சஇருதயக் தொடர்புபட்டதாய் குறிப்பிடப்படும் மன்னன் யார்?

2) “அதன்வீரப்பிரதாபங்களை பற்றி ஒரு பரணி பாடினார்”
   1. பரணி எனப்படுவது யாது?
   2. இவ்வுரைப்பகுதி இடம்பெறும் பாடப்பரப்பு யாது? இங்கு பரணி எப்பொருளில் பயன்படுத்தப்படுகின்றது?

3) “வெண்ணிற மேகங்கள் நிலவை மூடி மூடி ஆலிங்கனம் செய்கையில் உறை தயிரில் பாலாடையோ என வியக்கவைத்தது அதன் வடிவம்”
   1. ஆலிங்கனம் என்ற பதத்தின் பொருள் யாது?
   2. இவ்வுரைப்பகுதி இடம்பெறும் பாடப்பரப்பு யாது?

4) “என்னத்துக்கு இந்த வண்டிலுக்கு குடிலைப்போல ஓல கட்டினிங்க”
   1. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   2. இவ்வுரையாடல் இடம்பெற்ற பாடப்பரப்பு, அதனை எழுதியவர் யார்?

5) “கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர் குழாஅத்துப்பேதை புகல்”
   1. எனும் குறளை கொண்டு கூட்டி மீண்டும் எழுதுக.
   2. கழாஅக்கால், பள்ளி, குழாத்து என்பனவற்றின் பொருளை தருக

6) “மடப்பாவை தன்வரமும் என்வரமும் வழுவாவண்ணம் கோடுகின்ற மொழியவன்பால் எனைத்தூது..”
   1. மடப்பாவை, கோடுகின்ற மொழியவன் என குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
   2. இப்பகுதி யாரால் யாருக்கு கூறப்பட்டது?